டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 161 5.12.2025 FRIDAY KARTHIGAI : 18 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 161 5.12.2025 வெள்ளிக்கிழமை கார்த்திகை : 18 விலை : ரூ.5/-

3 இருமல் மருந்து குடித்த குழந்தைகள் உயிரிழந்த விவகாரம்: மருந்து நிறுவன உரிமையாளர் சொத்துகளை முடக்கிய அமலாக்கத் துறை

4 "பாமக தலைவராக நான் தான் நீடிப்பேன்; அவர்களை எதிர்கொள்ள தயார்!" அன்புமணி உறுதி

2 'எச்1பி' விசாவில் மோசடி புகார்டிரம்ப் நிர்வாகம் புதிய உத்தரவு

# பிரதமர் மோடி அழுத்தத்திற்கு அடிபணியக் கூடியவர் அல்ல; ரஷ்ய அதிபர் புடின் பாராட்டு



புதுடில்லி: டிச.5-

பிரதமர் மோடி அழுத்தத்திற்கு அடிபணியக்கூடியவர் அல்ல என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

இன்றைய இந்திய பயணம் குறித்து ஆங்கில செய்தி சேனலுக்கு, ரஷ்ய அதிபர் புடின் அளித்த பிரத்யேக பேட்டி: இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை உலகம் கண்டுள்ளது. இந்திய தலைமையை பற்றி நாடு பெருமை கொள்கிறது. பிரதமர் மோடி அழுத்தத்திற்கு அடிபணிய கூடியவர் அல்ல. நண்பர் மோடியை சந்திக்க பயணம் செய்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியா ரஷ்யா உறவை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்க நிறைய இருக்கிறது.

இந்தியா மிக குறுகிய காலத்தில் பெரிய வளர்ச்சியை கண்டுள்ளது. சீனாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டின் போது, பிரதமர் மோடியும், நானும் ஒரே காரில் பயணம் செய்தது தற்செயலாக நடந்தது. இந்த பயணம் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை. நாங்கள் வெளியே வந்தோம். என் கார் அங்கே இருந்தது. நானும், எனது நண்பரும் ஒரே காரில் பயணம் செய்தோம். நாங்கள் பயணம் முழுவதும் பேசினோம்.

மாநாடு நடக்கும் இடத்திற்கு கார் வந்த பிறகும், நாங்கள் காருக்குள் சிறிது நேரம் அமர்ந்து ஆலோசனை நடத்தினோம். இந்தியா 7.7 சதவீத வளர்ச்சியுடன் வேகமாக வளரும் பொருளாதாரம் கொண்ட ஒரு சிறந்த நாடு. இது பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் ஒரு சாதனை. விண்வெளி ஆய்வு, அணுசக்தி, கப்பல் கட்டுமானம் மற்றும் விமான உற்பத்தி ஆகிய துறைகளில் இந்தியாவும், ரஷ்யாவும் இணைந்து செயல்படுகின்றன. இவ்வாறு அதிபர் புடின் கூறினார்.



## பாலமேட்டில் பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி சார்பில் ஜல்லிக்கட்டுக்கு துண்டு பிரசுரம் வழங்கும் பணி தொடக்கம்

அலங்காநல்லூர். டிச.05


மதுரை மாவட்டம் பாலமேடு கிராமம் பொது மகாலிங்க சுவாமி மடத்துக்கமிட்டி சார்பாக ஆண்டுதோறும் உலகப் புகழ்பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு நடைபெறும். தமிழர்களின் வீரத்தையும் பாரம்பரியத்தையும் போற்றும் விதமாக மாட்டுப் பொங்கல் அன்று பாலமேடு கிராமம் மடத்துக்கமிட்டி சார்பாக மாபெரும் ஜல்லிக்கட்டு நடைபெறும் ஜனவரி மாதம் 16ம் தேதி உலகப் புகழ்பெற்ற பாலமேடு பகுதியில் மாபெரும் ஜல்லிக்கட்டு நடைபெற உள்ளது பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி மடத்துக்கமிட்டி சார்பாக நேற்று வலையபட்டி

மஞ்சமலைஅய்யனார் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு. பின்னர் ஜல்லிக்கட்டுக்கான துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்வு பாலமேடு வாடிவாசல் முன்பு கிராம பொது மகாலிங்க சுவாமி மடத்துக்கமிட்டி சார்பாக ஜல்லிக்கட்டு விழாவிற்கான துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் பாலமேடு பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல்,செயலாளர் பிரபு,பொருளாளர் கார்த்திக்,ஆகியோர் தலைமையில் துண்டு பிரசுரங்கள் வினியோகம் தொடங்கப்பட்டது.

உறுப்பினர்கள் தேவராஜ், சரவணன், சேகர்,குணசேகர், நிதிஷ்குமார், மணி,கந்தசாமி, விஜயகுமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் கைலாசநாதர் கோவிலில் கார்த்திகை மகாதீபம் ஏற்றும் நிகழ்வு





தேனி, டிச.5

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே கைலாசப்பட்டியில் அமைந்துள்ள இந்து சமய அறநிலைய துறைக்கு கட்டுப்பட்ட, அருள்மிகு பெரியநாயகி உடனுறை கைலாசநாதர் திருக்கோவிலில், கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு தீபம் ஏற்றும் நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தீபம் ஏற்றும் நிகழ்வை கண்டு மகிழ்ந்தனர். பொதுமக்கள் அரோகரா கோஷத்துடன் சிவனை வழிபட்டு, தீபச்சுடரை கண்டுகளித்து பக்தி பரவசத்தில் ஆழ்ந்து திளைத்தனர். இந்நிகழ்ச்சியில் , அறநிலையத்துறை சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியிள் முன்னாள் முதலமைச்சர் ஓபிஎஸ் புதல்வர் பிரதீப் சாமி தரிசனம் செய்தார். சிவக்குமார், தீபத் திருநாளை முன்னிட்டு கைலாசநாதர் திருக்கோயிலில் பாதுகாப்பு பணிக்காக நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த தீபத் திருநாள் விழாவிற்கான ஏற்பாடுகளை, அன்பர் பணி செய்யும் குழுவினரும், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளும் சிறப்பாக செய்திருந்தனர்.

## அரியலூர் ஏடி பஞ்சாயத்து

# பழனிச்சாமியின் பகல் கொள்ளை



அரியலூர், டிச.5-

அரியலூர் மாவட்டத்தில் 210 பஞ்சாயத்துகளுக்கு வெண்டிலேட்டர்கள் வாங்கியதிலும், மின்சாரத்தில் இயங்கும் 240 குப்பை வண்டிகள் வாங்கியதில் முறைகேடு நடந்திருப்பதாக, அரியலூர் ஆட்சியரக வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக விசாரித்த போது 210 பஞ்சாயத்துக்களுக்கும் வெண்டிலேட்டர்கள் தலா ரூ 50,000 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகவும், இதில் கிட்டத்தட்ட 50 லட்சத்தை அரியலூர் உதவி இயக்குனர் பழனிச்சாமி சுருட்டி விட்டார் என்று பேசப்பட்டு வருகிறது. மேலும் மின்சாரத்தில் இயங்கும் குப்பை வண்டிகள் 240 வாங்கியதில் ஒரு குப்பை வண்டியின் நிர்ணய விலை ரூ. 1,80,000 என்று இருக்கும் போது, உதவி இயக்குனர் பழனிச்சாமி அவர்கள் ரூ. 2,80,000 என்று பில் போட்டு சில கோடிகளை பார்த்து விட்டதாகவும் பேசப்பட்டு வருகிறது.

பெரம்பலூரில் செயல்பட்டு வரும் சாமி எலக்ட்ரிக்கல்சில் இவர் ரூபாய் 20 லட்சம் வாங்கியுள்ளதாகவும், அதை அவர் திருப்பிக் கொடுக்கவில்லை எனவும் தெரிய வருகிறது. பஞ்சாயத்துகளுக்கு தேவைப்படும் பிளம்பிங் சம்பந்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் இங்கிருந்து தான் கொள்முதல் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது..

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க தலைவர் ஜாகிர் உசேன் பிடிஓ அவர்களிடம் ரூ. 12,00,000 அரியலூர் உதவி இயக்குனர் பழனிச்சாமி GPAY நம்பரில் வாங்கி உள்ளதாகவும், அதனையும் திருப்பிக் கொடுக்கவில்லை எனவும்,

அதற்காக ஜாகிர் உசேன் பிடிஓ தலைமையில் சில போராட்டங்களை முன்னெடுத்ததாகவும் பரபரப்பாக பேசப்பட்டு வரும் நிலையில், இது குறித்து அரியலூர் ஏடி பழனிச்சாமி அவர்களை தொடர்பு கொண்ட பொழுது, இது எதுவும் உண்மை இல்லை எனவும், குப்பை வண்டிகள் கொள்முதல் செய்வது என்னுடைய அதிகாரத்துக்கு உட்பட்டதில்லை எனவும் கூறி வருகிறார்..

மேலும் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் புதியதாக எஸ்டேட் வாங்கி உள்ளதாகவும் மாவட்ட ஆட்சியரக வட்டாரத்தில் கிசுகிசுக்கப்படுகிறது.

மக்களின் வரிப்பணத்தில், அதிகாரம் உள்ளோர் இதுபோன்று வரம்பு மீறி லஞ்ச லாவண்யத்தில் ஈடுபடும் அதிகாரிகளை களையெடுப்பதில், லஞ்ச ஒழிப்புத் துறையும் சம்பந்தப்பட்ட துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கூற்றாக உள்ளது.

# சிறுபான்மையின மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன்

## குட்டத்து ஆவாரம்பட்டி புனித சவேரியார் திருத் தேரோட்ட விழாவில்

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு



சின்னாளபட்டி டிச.05

குட்டத்து ஆவாரம்பட்டி புனித சவேரியார் திருத்தல விழாவை முன்னிட்டு தேரோட்டம் நடைபெற்றது. ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரோட்டத்தை துவக்கி வைத்து பேசும்போதுர் சிறுபான்மை இன மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என்றார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், குட்டத்துப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட குட்டத்து ஆவாரம்பட்டியில் உள்ள புனித சவேரியார் திருத்தல விழாவை முன்னிட்டு தேரோட்டமும், கோவில் தரைத்தளம் திறப்புவிழாவும் நடைபெற்றது. விழாவிற்கு குட்டத்து ஆவாரம்பட்டி புனித சவரியார் தேவாலயபங்குத் தந்தை ஜான் நெப்போலியன் தலைமை தாங்கினார். உதவி பங்குத் தந்தை டேனியல், உதவி பங்குத்தந்தை அந்தோணி சிந்து, ஊர் நாட்டாண்மை ஆரோக்கியதாஸ், மணியம் மரியஆரோக்கியம், பொருளாளர் ஜோசப் வில்லியம், மைக்கேல் துறவற சபை அருட்சகோதரர்கள் மற்றும் திரு இருதய சபை அருட்சகோதரரிகள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராம மக்கள் அதிர்வேட்டு முழங்க மலர்தூவி கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளித்தனர். அதன்பின்னர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், சவோரியார் கோவிலின் தரைத்தளத்தை திறந்து வைத்தார். வாழ்த்துரை வழங்கிய பங்குத்தந்தை ஜான் நெப்போலியன் இறைமக்கள் மத்தியில் பேசும்போது நமக்கு மட்டுமின்றி ஆத்தூர் தொகுதிக்கு கிடைத்த அரிய பொக்கிஷம் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள். சிறுபான்மையின மக்கள் திருத்தலம் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு எந்தவொரு கோரிக்கை வைத்தாலும், அதை உடனே நிறைவேற்றிக் கொடுப்பவர் நமது மண்ணின் மைந்தர் ஐயா ஐ.பெரியசாமி அவர்கள், அவர் நமக்கு கிடைத்த மாபெரும் சொத்து, மாபெரும் பொக்கிஷம். அவருக்கு நம் இறைமக்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார். அவரை அடுத்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், புனித சவேரியார் திருக்கோவில் தேரோட்டத்தில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த திருவிழாவை கொண்டாடும் கிறிஸ்துவ சமுதாய மக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் எல்லாம்கிடைத்திட இறைவனை வேண்டுகிறேன். தமிழகத்தில் நடைபெறும் கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மக்களுக்கான ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை உருவாகி உள்ளது என்றார். குட்டத்துப்பட்டி மட்டுமின்றி ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள வன்னிய கிறிஸ்துவ மக்கள் என் மீது வைத்திருக்கும் அன்பு அளவில்லாதது. கடந்த 33 ஆண்டுகளாக அவர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பிற்கும். பாசத்திற்கும் கடமைப்பட்டுள்ளேன் என்றார். அதன்பின்னர் தேரில் இருந்த சவரியாருக்கு மாலை மற்றும் தலைப்பாகை சூட்டி வழிபாடு செய்தபின்பு வடம் பிடித்து தேரோட்டத்தை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்;ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திமுக பிரமுகர் அம்பை ரவி மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஆரோக்கியமேரிசுதாசெல்வி ராஜா, அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால், தெற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பளர் ஜெ.மரியபவுல்ராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மரியசர்ச்சில், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், கிளைச் செயலாளர் ஜோவின் ஸ்டுடியோ சேசுராஜ் மற்றும் ஊர் முக்கிய பிரமுகர்கள் குட்டத்துப்பட்டி, குட்டத்து ஆவாரம்பட்டி பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். திருத்தல பங்குத்தந்தை திருத்தேருடன் சவரியார் தேர்கள் இரண்டும் பங்கு பெற்று ஊர் முக்கிய தெருக்கள் வழியாக வந்து தேவாலயத்தை வந்தடைந்தது.

# பாமகவின் மாம்பழம் சின்னம் முடக்கி வைக்கப்படும் டில்லி ஐகோர்ட்டில் தேர்தல் கமிஷன் பதில்

புதுடில்லி, டிச.5-

இருதரப்புக்கு இடையே பிரச்னை நீடித்தால், பாமகவின் மாம்பழம் சின்னம் முடக்கி வைக்கப்படும் என டில்லி ஐகோர்ட்டில் வழக்கு விசாரணையின் போது தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

பா.ம.க., தலைவராக ராமதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதை அங்கீகரிக்க வேண்டும் என, பா.ம.க., எம்.எல்.ஏ.,க்கள் ஜி.கே.மணி, அருள் உள்ளிட்டோர் அளித்த மனுவை, தலைமை தேர்தல் கமிஷன் நிராகரித்துள்ளது.அதேநேரம், பா.ம.க., தலைவராக, வரும் 2026ம் ஆண்டு ஆகஸ்ட் வரை அன்புமணி தொடர்வார் என்ற பொதுக்குழு தீர்மானத்தை, தேர்தல் கமிஷன் அங்கீகரித்துள்ளது. அதனால், பா.ம.க., பெயர், கொடி, சின்னம் ஆகியவை, அன்புமணி தலைமையிலான கட்சிக்கு சொந்தமாகியுள்ளன.



இதை எதிர்த்து, ராமதாஸ் தரப்பில், டில்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்று (டிச.,04) விசாரணைக்கு வந்தது. அப்போது அன்புமணி, ராமதாஸ் ஆகிய இருதரப்பு தனது வாதங்களை முன்வைத்தது. இதற்கு பதில் அளித்து தேர்தல் கமிஷன் கூறியதாவது:

பாமகவில் தலைமை பிரச்னை உருவாகி உள்ளது. அதனால் சின்னம் ஒதுக்க முடியாது. அன்புமணிக்கோ, ராமதாஸ் தரப்புக்கோ பாமக சின்னத்தை ஒதுக்க முடியாது. இருதரப்புக்கு இடையே பிரச்னை நீடித்தால், பாமகவின் மாம்பழம் சின்னம் முடக்கி வைக்கப்படும்.

இருதரப்பும் பிரச்னைக்குரியதாக இருந்தால் தேர்தல் கமிஷன் படிவம் ஏ மற்றும் படிவம் பி.,யில் இரு தரப்பு கையெழுத்து போடுவதை ஏற்காமல் சின்னமும் முடக்கி வைக்கப்படும். விண்ணப்பங்களில் இரண்டு தரப்புமே பிரச்னை முடியும் வரை கையொப்பமிட்டு தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிப்பது ஏற்க முடியாது.

எனவே கட்சியின் சின்னத்தை முடக்கி வைப்பது தான் ஒரே வழியாக இருக்கும். எங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் அன்புமணி பாமக தலைவராக ஏற்கிறோம். இதில் பிரச்னை இருக்கிறது என்றால் உரிமையியல் நீதிமன்றத்தை நாடலாம். இவ்வாறு தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

# 'எச்1பி' விசாவில் மோசடி புகார்டிரம்ப் நிர்வாகம் புதிய உத்தரவு

நியூயார்க், டிச.5-

மோசடி புகாரை தொடர்ந்து, 'எச்1பி' விசா விண்ணப்பதாரர்களை தீவிர விசாரணைக்கு உட்படுத்த டிரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.




அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டினருக்கு எச்1பி விசா வழங்கப்பட்டு வருகிறது. அதில், 75 சதவீத விசாக்கள் இந்தியர்களுக்கே வழங்கப்படுகின்றன. இது, அமெரிக்கர்களின் வேலையை பறிப்பதாகக் கூறி, அந்த நாட்டின் அதிபர் டொனால்டு டிரம்ப், பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

எச்1பி விசா திட்டத்தில் முறைகேடு நடப்பதாக அமெரிக்க முன்னாள் எம்.பி.,யும், பொருளாதார நிபுணருமான டேவ் பிராட் என்பவர் குற்றச்சாட்டை முன்வைத்து இருந்தார். அவர், '' அமெரிக்காவில் பணிபுரிய சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மூலம் 2 லட்சத்து 20,000 விசாக்கள் வழங்கப்பட்டு உள்ளது'' என்றும் புகார் கூறியிருந்தார்.

தற்போது எச்1 விசா மோசடி புகாரை தொடர்ந்து, அமெரிக்க வெளியுறவுத்துறை ஒரு முக்கிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. எச்1 பி விசாக்களுக்கு விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை அதிகம் சோதனை செய்ய வேண்டும். விண்ணப்பதாரர்களை தீவிர விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். LinkedIn சுயவிவரங்களை ஸ்கேன் செய்யவும் துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

# சென்னை, புறநகரில் தொடர் மழை: நீர் வடியாத பகுதிகளில் பொதுமக்கள் அவதி

சென்னை, டிச.5-



தொடர் மழையால் நீர் வடியாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். வெள்ளம் சூழ்ந்த பகுதியில் சிக்கிய 30க்கும் மேற்பட்டோர் படகுகள் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

வங்கக் கடலில் உருவான டிட்வா புயல் காரணமாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த நவ.29ம் தேதி முதல் மழை பெய்து வருகிறது. கடந்த டிச.1, 2 தேதிகளில் அதிகனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக, மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் குடியிருப்புகளை மழைநீர் தேங்கியுள்ளது. இதனால், அப்பகுதிகளில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குறிப்பாக, மாதவரம் அடுத்த வட பெரும்பாக்கம் சாலை, திருவொற்றியூர் ராஜாஜி நகர், வியாசர்பாடி முல்லைநகர், திரு.வி.க.நகர் மண்டலம், காந்திநகர், வாட்டர் ஒர்க்ஸ் சாலை, தேனாம்பேட்டை மண்டலம், டிரஸ்ட் புரம், அண்ணாநகர் மண்டலம் மில்லர்ஸ் சாலை, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர், அம்பத்தூர் தொழிற்பூங்காவின் சில பகுதிகள், பட்டாளம் ஆஞ்சநேயர் கோயில் பகுதி, புளியந்தோப்பில் சில சாலைகள் உள்ளிட்டவற்றில் மழைநீர் தேங்கியுள்ளது.

செங்குன்றம் பகுதியில் மழைநீர் சூழ்ந்ததால், அப்பகுதியில் வசித்த 30க்கும் மேற்பட்டோரை பைபர் படகுகள் மூலம் பேரிடர் மீட்பு படையினர் மீட்டனர். ஓட்டேரி பகுதியில் கனமழையால் வீடு இடிந்ததில் 3 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துணை முதல்வர் ஆய்வு: சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் ஆய்வு செய்தார். அப்போது, சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்புகள், உயிரிழப்புகள், கால்நடைகள் இறப்பு, நீரில் மூழ்கியுள்ள பயிர்கள் சேதம், நீர்நிலைகளில் நீர் இருப்பு நிலவரம் உள்ளிட்டவை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

சென்னை மாநகரில் மழைநீர் தேங்கிய பகுதிகளில் ராட்சத மோட்டார்கள் மூலம் மாநகராட்சி சார்பில் வெளியேற்றப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேற்று ஒரே நாளில் மாநகராட்சி சார்பில் 2,74,600 பேருக்கு காலை உணவு, 3,51,300 நபர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

பொதுமக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், நேற்று 103 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

பொதுமக்களை மீட்பதற்காக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 300 பேர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் 50 பேர் தயார் நிலையில் உள்ளனர்.

மழையின் காரணமாக விழுந்த 64 மரங்களும் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் மழைநீர்த் தேக்கம் இன்றி போக்குவரத்து சீராக உள்ளது என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனமழை காரணமாக கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் மாநகராட்சி சார்பில் புதிதாக அமைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட 4 குளங்களில் நீர் நிறைந்து காணப்படுகிறது.

இதன் காரணமாக, அப்பகுதியை சுற்றியுள்ள கிண்டி, 5 பர்லாங் சாலை, மடுவின் கரை, வேளச்சேரி குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேக்கம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தூண்டில் முள்வளைவு கோரி புதுவை கிழக்கு கடற்கரை சாலையில் மீனவர்கள் மறியல்: மக்கள் அவதி

புதுச்சேரி. டிச.5-

தூண்டில் முள் வளைவு கோரி புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் படகு மீன்பிடி வலைகளுடன் மீனவர்கள் மறியல் செய்து வருவதால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர்.



புதுவை காலாப்பட்டு, சின்ன காலாப்பட்டு பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட மீனவ குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். சுமார் 200 படகுகளில் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். சின்ன காலாப்பட்டு பகுதியில் கடல் அரிப்பு ஏற்படுகிறது. இதற்கு நிரந்தர தீர்வாக தூண்டில் முள் வளைவு அமைக்க வேண்டும் என நீண்டகாலமாக அவர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

அரசு சார்பில் கடல் அரிப்பை தடுக்க கடற்கரையில் கற்கள் கொட்டப்பட்டு வருகிறது. இந்த கற்களையும் கடல் அலை இழுத்துச் செல்கிறது. கடந்த மாதம் கனமழை பெய்தபோது மீனவர்களின் படகுகள், வலைகளை அலை இழுத்து சென்றது.

இந்த நிலையில், டிட்வா புயல் முன்னெச்சரிக்கையாக படகுகளை மேடான பகுதிக்கு மீனவர்கள் இழுத்துச்சென்று வைத்தனர். மீன்பிடி வலைகள், உபகரணங்களையும் கடலோரத்தில் இருந்து அகற்றி பாதுகாப்பான இடத்தில் வைத்தனர்.

இந்நிலையில் நேற்று இரவு திடீரென கனமழை பெய்தது. இதனால் மேட்டுப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் மழை வெள்ளம் கடலுக்குள் இழுத்து சென்றது. இதைப்பார்த்த மீனவர்கள், அதை தடுத்தனர். இருப்பினும் 3 படகுகள், வலைகளும் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டது. இந்த வலைகளின் மதிப்பு மட்டும் ரூ.50 லட்சம் என மீனவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து சின்ன காலாப்பட்டு மீனவர்கள் இன்று கிழக்கு கடற்கரை சாலையில் கடல் அரிப்பை தடுக்க நிரந்தர தீர்வு காண தூண்டில் முள் வளைவு அமைக்க வலியுறுத்தி சாலை மறியலில் ஈடுபட்டனர். போராட்டத்தில் 2 படகுகள், மீன்பிடி வலைகளை சாலையில் போட்டு மறியல் செய்தனர்.

பள்ளி, கல்லுரி, பணிக்குச் செல்லும் நேரத்தில் மறியல் நடந்ததால் கிழக்கு கடற்கரை சாலையில் இருபுறமும் வாகனங்கள் நின்றது. போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. தகவலறிந்த காலாப்பட்டு தொகுதி பாஜக எம்எல்ஏ கல்யாணசுந்தரம் அங்கு வந்து வரும் 8ம் தேதி தூண்டில் முள் வளைவு அமைக்க பூமி பூஜை நடத்த உள்ளதாக தெரிவித்தார். இதையேற்று மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டனர். போராட்டத்தால் சுமார் 1 1/2 மணி நேரம் கிழக்கு கடற்கரை சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



# ஆழியாறு கவியருவியில் வெள்ளம் சுற்றுலா பயணிகளுக்கு தடை

ஆனைமலை. டிச.5-

ஆழியாறு கவியருவியில் காட்டாற்று வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் அருவிக்கு செல்ல வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சி, வால்பாறை பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

ஆழியாறு கவியருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான வால்பாறை சண்முகா எஸ்டேட், சக்தி எஸ்டேட், தலநார் எஸ்டேட் பகுதிகளில் கனமழை பெய்வதால் வனப்பகுதியில் உள்ள நீரோடைகள் மற்றும் சிற்றாறுகளில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

இதனால் கவியருவியில் காட்டாற்று வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த தடுப்பு வேலிகள் உடைந்துள்ளன. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அருவிக்கு செல்ல வனத்துறையினர் தடை விதித்தனர்.

இதனால் நேற்று கவியருவிக்கு வந்த சுற்றுலா பயணிகள் காலை 10 மணி அளவில் ஆழியாறு வனத்துறை சோதனைச் சாவடியுடன் திருப்பி அனுப்பப்பட்டனர். நீண்ட தொலைவில் இருந்து வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மழையின் அளவு குறைந்து நீர்வரத்து சீரான பின்னர் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்படும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். கோவை மாநகரில் நேற்று முன்தினம் இரவு சுமார் அரை மணி நேரம் கனமழை பெய்தது.

இதனால் மாநகரில் உள்ள பல்வேறு சாலைகளில் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. பாதாள சாக்கடை திட்டப் பணிகள், குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெறும் சாலைகள் சேறும் சகதியுமாக மாறி வாகன ஓட்டிகள் செல்வதற்கே சிரமப்பட்டனர்.

கோவை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழை அளவு விவரம் (மில்லிமீட்டரில்): பீளமேடு விமான நிலையம் 2.70, வேளாண் பல்கலை. 15, பி.என்.பாளையம் 19, மேட்டுப்பாளையம் 8, பில்லூர் அணை 42, அன்னூர் 2.20, கோவை தெற்கு தாலுகா 4.40, தொண்டாமுத்தூர் 6, சிறுவாணி அடிவாரம் 16, மதுக்கரை 10, போத்தனூர் 2, மாக்கினாம்பட்டி 10, பொள்ளாச்சி 91, கிணத்துக்கடவு 4.40, ஆனைமலை 20, ஆழியாறு 15.80, சின்கோனா 3, சின்னக்கல்லாறு 7.

# சத்தீஸ்கரில் மேலும் 6 நக்சல்கள் சுட்டுக்கொலை

பிஜப்பூர். டிச.5-

சத்தீஸ்கரில் மேலும் 6 நக்சல்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டை நடக்கிறது.

நாட்டில் நக்சல்களை 2026ம் ஆண்டு மார்ச்சுக்குள் முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது.



இதையடுத்து நக்சல்களை ஒடுக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், சத்தீஸ்கரின் பிஜப்பூர், தண்டேவாடா மாவட்டங்களின் எல்லையில் உள்ள கங்கலூார் வனப்பகுதியில், நக்சல்கள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து சிறப்பு அதிரடிப்படையினர், பிஜப்பூர் மற்றும் தண்டேவாடா மாவட்ட ரிசர்வ் போலீசார், மத்திய ரிசர்வ் போலீசின் கோப்ரா பிரிவினருடன் இணைந்து அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு பதுங்கியிருந்த நக்சல்கள், பாதுகாப்பு படையினரை நோக்கி சுட்டனர். பதிலுக்கு அவர்களும் சுட்டனர். இந்நிலையில் இன்று (டிச.,04) 6 நக்சல்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஏற்கனவே, நேற்று நடந்த நடந்த சண்டையில், 12 நக்சல்கள் கொல்லப்பட்டனர். இதனால் கடந்த இரண்டு நாட்களில் மட்டும் சுட்டுக்கொல்லப்பட்ட நக்சலைட்டுகளின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்தது. இந்த சம்பவத்தையும் சேர்த்து சத்தீஸ்கரில் இந்தாண்டில் மட்டும், 281 நக்சல்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில், 246 நக்சல்கள் பஸ்தார் பகுதியை சேர்ந்தவர்கள்.

# தமிழகத்தில் நான்கரை ஆண்டுகளில் 50.19 லட்சம் பேருக்கு தொழில்முனைவு பயிற்சி: அமைச்சர் அன்பரசன் தகவல்

சென்னை. டிச.5-

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில், தொழில் முனைவோர் சான்றிதழ் படிப்பவர்களுக்கான தங்கும் விடுதியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று திறந்து வைத்தார்.



சென்னை: 'தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 50.19 லட்சம் பேருக்கு தொழில்முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது' என அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

சென்னை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழில் முனைவோர் சான்றிதழ் படிப்பில் சேருவோர் தங்கி பயில, ரூ.2.34 கோடியில் கட்டப்பட்ட தங்கும் விடுதியைகுறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள்துறை தா.மோ.அன்பரசன் நேற்று திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: 120 பேர் தங்கும் விடுதி தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்தும் சான்றிதழ் படிப்பில் 120 பேர் தங்கி பயிலும் வகையில் தங்கும் விடுதி திறக்கப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் புத்தாக்க பற்றுச்சீட்டு திட்டத்தின்கீழ் 20 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.35.63 லட்சம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்று தொழில் முனைவோர்களாக சாதனை படைத்துள்ள 5 பெண் தொழில் முனைவோர்களுக்கு விருதுகளும் வழங்கப்படுகிறது.

திமுக அரசு பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் 50.19 லட்சம் பேருக்கு தொழில் முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவித்தொகை திட்டத்தில், 572 பேருக்கு ரூ.14.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின்கீழ், 140 சிறந்த மாணவ குழுக்களுக்கு, ரூ.1 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 39 தொழில் வளர் காப்பகங்களுக்கு, ரூ.21 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த காப்பகங்கள் மூலம் 961 இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து தொழில்முனைவோர் களாக உருவாகி உள்ளனர்.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க சான்றிதழ் படிப்பில் இதுவரை 23 பேர் சான்றிதழ் படிப்பு முடித்து புதிய தொழில்களைத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் துறை செயலர் அதுல் ஆனந்த், சிட்கோ மேலாண் இயக்குநர் கார்த்திக், தொழில் வணிக ஆணையர் நிர்மல் ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தேசிய கல்விக்கொள்கை பரிந்துரையின்படி மாணவர்கள் கூடுதலாக ஒரு மொழி கற்கும் திட்டம்: யுஜிசி உத்தரவு

சென்னை. டிச.5-

தேசிய கல்விக்கொள்கையின் பரிந்துரைகளின்படி, உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்கள் மேலும் ஒரு இந்தியமொழியை கற்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்' என பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் யுஜிசி செயலர் மணிஷ் ஆர்.ஜோஷி அனுப்பிய சுற்றறிக்கை: மத்திய அரசின் புதிய கல்விக்கொள்கை–2020, தேசிய ஒருமைப்பாடு, அனைவருக்கான வளர்ச்சி ஆகியவற்றுக்காக, பன்மொழி திறன் அவசியத்தை வலியுறுத்தி வருகிறது.

அதன் ஒருபகுதியாக அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும்




'மேலும் ஒரு இந்திய மொழியை கற்போம்' (பாரதிய பாஷா சமிதி) எனும் திட்டத்தை செயல்படுத்த பரிந்துரை செய்துள்ளது. இது, மாணவ, மாணவிகளுக்கு மற்ற இந்திய மொழிகளையும் கற்க ஊக்கமாக அமையும். இதன்மூலம், கலாச்சாரப் புரிதல் மேம்படுத்தப்பட்டு, எதிர் காலத்தில் எங்கும் வேலைவாய்ப்புகளைப் பெற மாணவர்களுக்கு உதவும்.


எனவே, மேலும் ஒரு இந்திய மொழியை கற்போம் திட்டத்தை உயர்கல்வி நிறுவனங்களில் அமல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை யுஜிசி வகுத்துள்ளது. அதன்படி உயர்கல்வி நிறுவனங்கள் இந்திய மொழிகள் குறித்த படிப்புகளை 'கிரெடிட் ஸ்கோர்ஸ்' வாயிலாக வழங்கி, மாணவர்களை கற்க ஊக்குவிக்க வேண்டும்.

அனைத்து கல்வி நிறுவனங்களும், ஒரு உள்ளூர் மொழி மற்றும் பட்டியலிடப்பட்டுள்ள 22 இந்திய மொழிகளில் ஏதேனும் 2 மொழிகள் என குறைந்தது 3 மொழிகளைக் கற்பிக்கலாம். உயர்கல்வி நிறுவனங்கள், ஆரம்ப நிலை, இடை நிலை, முதன்மை என மூன்று விதமாக இந்த படிப்புகளை வழங்கலாம் தேவைக்கு ஏற்ப, படிப்பில் சேரவும், வெளியேறவும் வழிவகை செய்ய வேண்டும்.

மேலும், ஆசிரியர்களும், பணியாளர்களும் இந்த மொழி படிப்புகளை படிக்கலாம். மாணவர்கள் மட்டுமல்லாது, அவர்களின் நண்பர்கள், பெற்றோர், பாதுகாவலர்களையும் இந்த படிப்பில் இணைக்கலாம்.

இந்த மொழி படிப்புகளை, நேரடிமற்றும் ஆன்லைன் வாயிலாக வழங்க வேண்டும். வயது வரம்பாக 16 என நிர்ணயம் செய்யலாம். அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி 'மேலும் ஒரு இந்திய மொழியை கற்போம்' திட்டத்தை தங்களது நிறுவனங்களில் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# இருமல் மருந்து குடித்த குழந்தைகள் உயிரிழந்த விவகாரம்: மருந்து நிறுவன உரிமையாளர் சொத்துகளை முடக்கிய அமலாக்கத் துறை



சென்னை. டிச.5-

மத்தியப் பிரதேசம் மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில் கோல்ட்ரிப் இருமல் மருந்து குடித்த 20க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர். இதையடுத்து அந்த மருந்தை தயாரித்த தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீசன் பார்மாசூட்டிக்கல் நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டு ஆலை மூடப்பட்டது.

பின்னர் அம்மாநில போலீஸார் நிறுவன உரிமையாளர் ரங்கநாதனை கைது செய்தனர். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக, மருந்து கட்டுப்பாட்டுத் துறை இணை இயக்குநர் கார்த்திகேயன் உள்ளிட்ட அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது.

முறையான அனுமதி இல்லாமல் இந்நிறுவன மருந்தை ஏற்றுமதி செய்ய தடையின்மை சான்று வழங்க சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் புகார் எழுந்தது.

இதையடுத்து சென்னை லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் இணை இயக்குநரான கார்த்திகேயன் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியது.

இதையடுத்து லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில், சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின்கீழ் நிறுவனம் மற்றும் அதன் உரிமையாளர் ரங்கநாதன் உள்ளிட்டோர் மீது அமலாக்கத் துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியது.

ரூ.2.04 கோடி சொத்து: இதன் தொடர்ச்சியாக கடந்த அக்டோபர் மாதம் சென்னை, காஞ்சிபுரத்தில் அந்நிறுவனம் தொடர்புடைய 10 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்த அமலாக்கத் துறை அதிகாரிகள், ரங்கநாதன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் ரூ.2.04 கோடி மதிப்புள்ள அசையா சொத்துக்களை முடக்கியுள்ளனர்.

இதுகுறித்து அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஸ்ரீசன் பார்மாசூட்டிக்கல் நிறுவனம் தனது லாபத்தை உயர்த்திக்கொள்ள சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது.

இருமல் மருந்து தயாரிக்க தரமற்ற மூலப்பொருட்களை பயன்படுத்தியதுடன், முறையாக தரப் பரிசோதனை செய்யாமல், ரசீதுகள் இன்றி மூலப்பொருட்களை வாங்கியதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் அந்நிறுவனத்தின் உரிமையாளருடன் தமிழக மருந்து கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகள் தொடர்பில் இருந்து கொண்டு, சட்டப்படி நடத்தவேண்டிய வருடாந்திர ஆய்வு மற்றும் தணிக்கைகளை நடத்தவில்லை. இது தொடர்பாக, மருந்து நிறுவனத்தின் உரிமையாளர் தொடர்புடைய 10 இடங்களில் சோதனை நடந்தது.

சோதனையில் நிறுவனம் தொடர்பான நிதி ஆவணங்கள், மருந்து கொள்முதல் தொடர்பான ஆவணங்கள், மருந்து கட்டுப்பாட்டு துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளில், மருந்து நிறுவனத்தின் உரிமையாளர் ரங்கநாதன் மற்றும் அவரது குடும்பத்துக்கு சொந்தமான கோடம்பாக்கத்தில் உள்ள ரூ.2.04 கோடி மதிப்புள்ள 2 வீடுகள் அடங்கும். தற்போது அந்த அசையா சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் ஓபிஎஸ் சந்திப்பு



சென்னை, டிச.5-

டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்தார். தமிழக அரசியல் சூழ்நிலை குறித்து அவரிடம் பேசியதாக சென்னை திரும்பிய ஓபிஎஸ் தெரிவித்தார்.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவை நடத்தி வருகிறார். அதிமுகவை ஒன்றிணைக்காவிட்டால், மக்கள் விரும்பும் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன்பு, அவர் டெல்லி சென்றார். ஆடிட்டர் குருமூர்த்தியும் டெல்லிக்கு சென்றிருந்தார். இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை ஓபிஎஸ் நேற்று சந்தித்து சுமார் 30 நிமிடங்கள் பேசியுள்ளார்.

இதை தொடர்ந்து, நேற்று இரவு ஏர் இந்தியா விமானத்தில் டெல்லியில் இருந்து சென்னை வந்த ஓபிஎஸ், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். தமிழகத்தின் அரசியல் சூழ்நிலைகளைப் பற்றி அவரிடம் விவாதித்தேன்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், மழை பெய்ததும் உடனுக்குடன் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் உடனடியாக வழங்கப்படும். ஆனால், தற்போதைய திமுக அரசு அதில் சுணக்கம் காட்டுகிறது. இவ்வாறு ஓபிஎஸ் தெரிவித்தார்.

தனிக்கட்சி தொடக்கமா? :

அதிமுகவில் மீண்டும் ஓபிஎஸ்ஸை சேர்க்க முடியாது என பழனிசாமி திட்டவட்டமாக கூறிவருகிறார். இந்த நிலையில், 2026 தேர்தலில் தமிழகத்தில் எப்படியாவது அதிமுக பாஜக கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் பாஜக, ஓபிஎஸ்ஸின் தென் மாவட்ட வாக்கு வங்கியை இழந்துவிடக் கூடாது என்பதிலும் உறுதியாக உள்ளது.

அதனால், தனிக்கட்சி தொடங்க அவருக்கு பாஜக தரப்பில் ஆலோசனை வழங்கப்பட்டதாகவும், கட்சியை பதிவு செய்யத்தான் அவர் டெல்லி சென்றதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கோயில் நிர்வாகி கொலை வழக்கில் 14 பேருக்கு இரட்டை ஆயுள்: தென்காசி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு



தென்காசி, டிச.5-

திருவிழாவில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக கோயில் நிர்வாகி கொலை வழக்கில் 14 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

நெல்லை மாவட்டம் பாப்பாக்குடி அருகே காசிநாதபுரத்தில் சீவலப்பேரி சுடலைமாட சுவாமி கோயில் உள்ளது. இங்கு திருவிழா நடத்துவது தொடர்பாக, அப்பகுதியைச் சேர்ந்த இரு தரப்பினரிடையே பிரச்சினை இருந்துள்ளது.

ஒரு பிரிவுக்கு தலைவராக விநாயகம் என்பவரும், மற்றொரு பிரிவுக்கு தலைவராக மணிவேல் (45) என்பவரும் செயல்பட்டு வந்தனர். இவர்களிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், 2015 செப். 2ம் தேதி மணிவேல் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அங்குள்ள கற்குவேல் அய்யனார் கோயிலுக்குச் சென்றனர். அப்போது, விநாயகம் தரப்பினர் அங்கு சென்று, மணிவேலிடம் தகராறு செய்துள்ளனர். அப்போது, மணிவேலை ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

தடுக்க முயன்றவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும், மணிவேலின் டிராக்டரும் சேதப்படுத்தப்பட்டது. இதில் காயமடைந்த மணிவேல் உட்பட 3 பேர் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி மணிவேல் உயிரிழந்தார். இது தொடர்பாக பாப்பாக்குடி போலீஸார் வழக்கு பதிவு செய்து, 17 பேரைக் கைது செய்தனர். இந்த வழக்கு தென்காசி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது. விசாரணையின்போது, குற்றம் சுமத்தப்பட்ட முத்துக்குமார், பிச்சையா, முத்துராஜ் ஆகியோர் இறந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.மனோஜ்குமார், குற்றம் சுமத்தப்பட்ட விநாயகம் (47), உலகநாதன் (48), சிவசுப்பிரமணியன் (38), சுடலை (29), சுப்பிரமணியன் (60), சந்தானம் (30), சிவன்சேட் (42), மாணிக்கராஜ் என்ற மாரி (29), வேல்துரை (43), கருப்பையா (57), ரமேஷ் (30), பண்டாரம் (73), மணிவேல் (43), கலைவாணன் (29) ஆகியோருக்கு கொலை குற்றத்துக்காக ஓர் ஆயுள் தண்டனை, கொலை முயற்சிக்கு ஓர் ஆயுள் தண்டனை, சொத்துகளை சேதப்படுத்தியதற்காக 3 ஆண்டுகள் சிறை மற்றும் தலா ரூ.41 ஆயிரம் அபராதம் விதித்து நேற்று தீர்ப்பளித்தார்.இந்த வழக்கில் அரசுத் தரப்பில் வழக்கறிஞர் எஸ்.வேலுச்சாமி ஆஜரானார்.

# 2026 தேர்தலை ஆன்மிகம் VS திராவிடம் என்ற அடிப்படையில் சந்திக்க வேண்டும்” இந்து மக்கள் கட்சி



சென்னை. டிச.5-

தமிழகத்தில் 2026 தேர்தலை ஆன்மிகமா, திராவிடமா என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் சந்திக்க வேண்டும் என இந்து மக்கள் கட்சி மாநில பொதுச் செயலாளர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

திருபரங்குன்றத்தில் கடந்த 100 ஆண்டுகளாக அதன் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற முடியாத வண்ணம் இருந்து வந்தது. இதற்கு தீர்வு காண்கின்ற வகையில் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் காவல்துறை அனுமதி மறுத்ததால் நேற்று இரவு அங்கு பதற்றம் ஏற்பட்டதுடன், தமிழகத்தில் உள்ள முருக பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக இந்து மக்கள் கட்சி மாநில பொதுச் செயலாளர் குருமூர்த்தி கூறியதாது: இந்துக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் வழிபாட்டு உரிமையை பறிக்கக் கூடிய வகையில் இந்து சமய அறநிலைத்துறை மேல்முறையீடு செய்தது.

இருப்பினும் பல்வேறு நெருக்கடிகளையும் தாண்டி தீபம் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் தமிழக அரசு தேவையற்ற பதற்றத்தை உருவாக்கி சட்ட ஒழுங்கு பிரச்சினையை உருவாக்கிட முனைப்பு காட்டி இந்து வழிபாட்டு உரிமைக்கு எதிராக செயல்பட்டுள்ளது.

இந்த விஷயத்தில் தமிழகத்தில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள், இந்துக்களின் வழிப்பாட்டு உரிமைக்கு ஆதரவாக அறிக்கை கூட அளிக்காமல் வாய் மூடி மவுனமாக இருந்தது பக்தர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சிறுபான்மை வாக்குகளுக்காக பெரும்பான்மை இந்துக்களின் வழிபாட்டு உரிமையை பறிப்பது மிகவும் கண்டனத்துக்குரியது.

எனவே, தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் வழிபாட்டு உரிமைக்கு ஆதரவாக உடனடியாக களம் காண வேண்டும். இல்லை என்றால் இந்துக்களின் வாக்கு தேவையில்லை என பிரகடனம் செய்ய வேண்டும். இது போன்ற அரசியல் கட்சிகளுக்கு பாடம் கற்பிக்கும் வகையில், தமிழகத்தில் 2026 தேர்தலை ஆன்மிகமா, திராவிடமா என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் சந்திக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# புதுச்சேரியில் மேலும் ஒரு போலி மருந்து ஆலை கண்டுபிடிப்பு ரூ.30 கோடி மதிப்பிலான பொருட்கள் பறிமுதல்



புதுச்சேரி. டிச.5-

புதுச்சேரியில் மூன்றாவதாக போலி மாத்திரைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கண்டறியப்பட்டுள்ளது. குடோனுக்கு சீல் வைத்து ரூ. 30 கோடி மாத்திரைகள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பிரபல மருந்து நிறுவனத்தின் பெயரில் போலியாக மருந்து, மாத்திரைகளை தயாரிக்கும் தொழிற்சாலைகள் புதுச்சேரியில் உள்ள மேட்டுப்பாளையம், திருபுவனை பாளையத்தில் அண்மையில் கண்டறியப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

போலி மருந்து தொழிற்சாலையில் இருந்து இதய நோய், ரத்த அழுத்தம் உள்ளிட்ட பிரதான நோய்களுக்கு பிரபல நிறுவனத்தின் போலி மருந்துகள் தயாரிக்கப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்த, இந்த தொழிற்சாலை மூலம் சுமார் ரூ. 2 ஆயிரம் கோடி வரை மருந்து விநியோகம் நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர். போலி தொழிற்சாலை நடத்திய ராஜா உட்பட 10 பேர் தலைமறைவாகியுள்ளனர்.

இந்த இரு தொழிற்சாலைகளில் இருந்து பல நூறு கோடி மதிப்பிலான போலி மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் போலி மருந்து தொழிற்சாலைக்கு தொடர்புடைய 7 இடங்களில் சோதனை நடத்த சிபிசிஐடி போலீஸார் முடிவு செய்தனர். இதற்காக மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

மனுவை விசாரித்த நீதிபதி 7 இடங்களில் ரெய்டு நடத்த சிபிசிஐடி போலீஸாருக்கு அனுமதி வழங்கினார். இதையடுத்து போலி மருந்து விவாகரங்களில் தொடர்புடைய மேலும் 7 இடங்களில் சிபிசிஐடி போலீசார் சோதனை நடத்த தொடங்கினர்.

முதலில் புதுச்சேரி செட்டித் தெருவில் உள்ள மருந்தகத்தில் சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் பாபுஜி, மத்திய மருந்து கட்டுப்பாட்டு துறை அதிகாரி தேவகிரி, புதுச்சேரி மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வாளர்கள் இந்துமதி, ஜெனிபர் ஆகியோர் சோதனை நடத்தினர்.

செட்டித்தெருவில் உள்ள தனியார் மருந்து விற்பனையகத்தில் மாத்திரைகளை சோதனைக்கு எடுத்து சென்றனர்.

மாத்திரைகளுக்கு தரப்பட்ட பேட்ஜ் எண்கள் பட்டியலை வைத்து சோதனை செய்யும் போது போலி மாத்திரைகள் இருக்கிறதா என்பது தெரியும். அதன் அடிப்படையில் நடவடிக்கை அமையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சோதனையில் சிபிசிஐடி போலீஸாருடன் மத்திய மற்றும் மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளும் பங்கேற்றனர். இதுகுறித்து காவல்துறை தரப்பில் கூறுகையில், "நல்ல மருந்துடன், போலி மருந்து கலந்து விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதாவது 100 நல்ல மாத்திரைகளுடன் 400 போலி நிறுவன மாத்திரைகளை கலந்து விற்றுள்ளனர்.

பரிசோதனைக்கு சாம்பிள்கள் எடுத்துள்ளோம். ஒவ்வொரு இடமாக சோதனை நடக்கும்" என்றனர். இந்நிலையில். புதுச்சேரி பூர்ணாங்குப்பம் பகுதியில் போலி மாத்திரை தொழிற்சாலை ஒன்று இயங்கி வருவதாக சிபிசிஐடி போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. நேற்று அங்கு சென்று சோதனை நடத்தினர்.

தொடர் விசாரணையில், இந்த போலி மருந்து நிறுவனத்தின் குடோன் இடையார் பாளையத்தில் இருப்பது தெரிந்தது. அங்கு சென்று பார்த்தனர். இங்கு 50க்கும் மேற்பட்ட முக்கிய நோய்களுக்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மாத்திரைகள் போலியாக உற்பத்தி செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தது கண்டறி யப்பட்டது.

அந்த குடோனில், இந்த போலி மாத்திரைகளை தயாரிக்கும் இயந்திரங்கள், பேக்கிங் பொருட்களும் இருந்தன. அவைகளை சிபிசிஐடி போலீஸார் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ. 30 கோடி வரை இருக்கும் என்று தெரிவித்தனர்.

# போலி ஆவணம், ஆள்மாறாட்டம் மூலம் ரூ.16 கோடி மதிப்பு நிலத்தை அபகரித்தவர் கைது



சென்னை. டிச.5-

ராயப்பேட்டையைச் சேர்ந்தவர் சிவகணேசன் (38). இவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அண்மையில் புகார் ஒன்றை அளித்தார். அதில், “தனியார் நிறுவனம் ஒன்றில் பங்குதாரராக உள்ளேன்.

இந்த நிறுவனம் சார்பில் நீலாங்கரை கபாலீஸ்வரர் நகரில் 60 ஏக்கரில் மனைப்பிரிவு (லேஅவுட்) போடப்பட்டுள்ளது. அந்த மனைப்பிரிவின் முன் பகுதியில் உள்ள 1,050 ச.மீ. இடத்தை அரசு சாலை விரிவாக்கத்துக்கு நெடுஞ்சாலைத் துறை கையகப்படுத்தியது.

அதற்கு ஈடாக அரசு வழங்கிய இழப்பீடு தொகை ரூ.16 கோடியை, மோசடி நபர் ஒருவர் போலி ஆவணம் மூலம் பெற்றுவிட்டார். முன்னதாக அந்த நபர் எங்களது நிலத்தை, போலி ஆவணம் மற்றும் ஆள்மாறாட்டம் மூலம் அபகரித்துவிட்டார்.

இதை அடிப்படையாக வைத்தே ரூ.16 கோடியை பெற்றுள்ளார். எனவே அவரை கண்டறிந்து கைது செய்ய வேண்டும்” என தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து, போலீஸார் மேற்கொண்ட விசாரணையில் சென்னை ஆழ்வார் திருநகரைச் சேர்ந்த சி.ஆர்.நடராஜன் (55) என்பவர் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர், இவர் எலெக்ட்ரிக் கடை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது



# வெளிநாட்டில் வேலை என அழைத்து செல்லப்பட்டு சைபர் மோசடிக்காக கடத்தப்பட்ட 29 தமிழர்கள் மீட்பு

சென்னை, டிச.5-


வெளிநாட்டில் அதிக சம்பளத்தில் வேலை என அழைத்துச் செல்லப்படும் தமிழர்கள், வேறு நாடுகளுக்கு சைபர் க்ரைம் மோசடி கும்பலால் கடத்திச் செல்லப்பட்டு அங்கு சைபர் மோசடி செய்ய பயன்படுத்தப்பட்டனர்.

இதை அறிந்த தமிழக சைபர் க்ரைம் போலீஸார் கடத்தப்பட்டவர்களை மீட்க ‘ஆபரேஷன் ப்ளூ ட்ரையாங்கிள்’ என்ற பெயரில் சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதில் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வெளிநாட்டில் வேலை எனக்கூறி பாங்காக் அழைத்து செல்லப்பட்டவர்கள், அங்கு துப்பாக்கி முனையில் மிரட்டி சட்ட விரோதமாக தாய்லாந்து எல்லை வழியாக சீனா மற்றும் மியான்மர் சைபர் மோசடி கும்பலிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அக்கும்பல் அவர்களை தாக்கி சிறை வைத்தது. அதோடு சைபர் மோசடிகளில் ஈடுபட பயிற்சியளித்து அவர்கள் மூலம் கோடிக்கணக்கான பணத்தை சுருட்டி உள்ளது. இக்கும்பலிடமிருந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 465 பேர் மீட்கப்பட்டு இந்தியா அழைத்து வரப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக 2வது கட்டமாக 395 பேர் அழைத்து வரப்பட்டனர். இவர்களில் 29 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

# 2026 தேர்தலில் போட்டியிட கீழ்வேளூர், கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட தொகுதிகளின் பட்டியல் தயார்: பெ.சண்முகம் தகவல்



புதுக்கோட்டை, டிச.5-

2026 பேரவைத் தேர்தலில் போட்டியிட, திமுக கூட்டணியில் ஏற்கெனவே வெற்றி பெற்ற கீழ்வேளூர், கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட தொகுதிகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் கடந்த 2 நாள்களாக நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டம் நேற்று நிறைவடைந்தது. கூட்டத்துக்கு கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் உ.வாசுகி தலைமை வகித்தார்.

தேசியப் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், மத்திய கட்டுப்பாட்டுக்குழுத் தலைவர் ஜி.ராமகிருஷ்ணன, மத்தியக்குழு உறுப்பினர்கள் பி.சம்பத், கே.பாலபாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்து மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் தனது கருத்தை சமூக ஊடகங்களில் பதிவிட்டிருந்தார்.

இதனால் அவருக்கு பாஜக மாநிலத் தலைவர், இந்து மக்கள் கட்சித் தலைவர் உள்ளிட்டோர் மிரட்டல் விடுத்து வருகின்றனர். காவல் துறையிலும் புகார் அளித்துள்ளனர். இதை சட்டரீதியாக எதிர்கொள்வோம். மிரட்டல் தொடர்பாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எம்.பி. வெங்கடேசனுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

புயல் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் நிவாரணம் போதாது. இதை ரூ.35 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியை தனியாருக்கு கொடுக்காமல், மாநகராட்சியே மேற்கொள்ள வேண்டும்.

கந்தர்வக்கோட்டை தொகுதி பிசானத்தூரில் உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை தொடங்குவதற்கான அனுமதியை ரத்து செய்ய வேண்டும்.

மாநிலம் முழுவதும் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் விவசாயம் செய்வோர், குடியிருப்போர், கடை நடத்துவோருக்கு, குறிப்பிட்ட தொகை நிர்ணயம் செய்து, அந்த இடத்தை முழுமையாகக் கொடுத்துவிட வேண்டும்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த முறை வெற்றி பெற்றுள்ள கீழ்வேளூர், கந்தர்வக்கோட்டை தொகுதிகள் உட்பட, போட்டியிட வாய்ப்புள்ள தொகுதிகளின் பட்டியல் தயார் செய்துள்ளோம்.

அதில் சில தொகுதிகளை கூட்டணி கட்சியினரும் கேட்கக் கூடும் என்பதால், அந்த விவரங்களை தற்போது தெரிவிக்க முடியாது. தேர்தல் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்கு இன்னும் குழு அமைக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



## பெரியகுளம் அருகே ஸ்ரீ பாபாஜி ஆசிரமத்தில் கார்த்திகை தீபத் திருவிழா

தேனி, டிச.5

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே கைலாசபட்டி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜி ஜி லா அல்சித் பாபாஜி ஆசிரமத்தில், கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு, மகாதீபம் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு ஸ்ரீ ஜி ஜி லா அல்சித் பாபாஜி அருளாசி வழங்கினார். இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ ஜிஜிலா அல்சீத் பாபாஜி ஆசிரம நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



■ தமிழநாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்ட இந்தியாவின் பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கண்காட்சி(சரஸ் மேளா) மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சி நிறைவு விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சுய உதவிக் குழுக்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி பாராட்டினார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., உடன் உள்ளார்.





■ மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோலையழகுபுரம், ஜெய்ஹிந்த்புரம் பகுதிக்குட்பட்ட இந்திராநகர், ஜயப்பன் நகர், இராமமூர்த்தி நகர், ஜானகி நகர்,மகாலட்சுமி கோவில் தெருக்கள் மற்றும் தேவர் நகர் குடிசை மாற்று வாரிய திட்டத்தில் பத்திரம் மற்றும் பட்டா பொதுமக்களுக்கு வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணை வழங்கிய உத்திரவினை விளக்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பொதுமக்களிடம் உரையாற்றினார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., உடன் உள்ளார்.

## “திமுக அரசை தினம்தோறும் குற்றம்சாட்டி வருகிறார் அன்புமணி...” அமைச்சர் கோவி.செழியன்

திருவிடைமருதூர்: டிச.5-

“அன்புமணி தினந்தோறும் ஏதாவது ஒரு துறையை எடுத்து, அது சம்பந்தப்பட்ட கருத்துகளை தெரிவித்து வருகிறார். அவ்வப்போது அதற்கான விளக்கங்களை நாங்கள் வழங்கி வருகிறோம்” என்று உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

திருவிடைமருதூர் வட்டம், செம்பியவரம்பல், தோப்புத்தெருவில் ரூ.3 கோடி மதிப்பில் சிறு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. எம்எல்ஏ சாக்கோட்டை க.அன்பழகன், முன்னாள் எம்பி செ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உயர் கல்வித் துறை அமைச்சரும், திருவிடைமருதூர் தொகுதி எம்எல்ஏவுமான கோவி. செழியன் தலைமை வகித்து, அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் கூறியது: “தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும் தலா ரூ.3 கோடி மதிப்பில் சிறு விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அதன்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் சில இடங்களில் சிறு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு காலதாமதமாகிறது. தற்போது அடிக்கல் நாட்டப்பட்ட செம்பியவரம்பல், தோப்புத்தெருவில்,ரூ.3 கோடி மதிப்பில் சுமார் 7 ஏக்கரில் சிறு விளையாட்டு மைதானம் அமைக்கப்படுகிறது. இந்தியாவிலேயே விளையாட்டு துறையின் தலைநகரமாக தமிழகம் திகழ்கிறது.

குக்கிராமத்தில் உள்ளவர்களும் உலக அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறவேண்டும் என்ற உந்து சக்தியை விதையாக விதைத்த பெருமை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கே சாரும்.

படித்து பட்டம் பெற்று, அனைத்து விஷங்களையும் தெரிந்த அரசியல் தலைவராக கருதப்படுகின்ற அன்புமணி, தொடர்ந்து திமுக அரசை குறை கூறி, குற்றம்சாட்டி வருகிறார். தினந்தோறும் ஏதாவது ஒரு துறை எடுத்து, அதன் சம்பந்தப்பட்ட கருத்துகளை தெரிவித்து வருகிறார். அவ்வப்போது அதற்கான விளக்கங்களை நாங்கள் வழங்கி வருகிறோம்.

சென்னை பல்கலைக்கழகத்தில் காலிப் பணியிடங்களில் நிரப்புவதற்கு, அந்த நிர்வாகத்துடன் கலந்து பேசி, முன்னோட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்கு குறைகள் நீக்கப்பட்டு, முழுமையான பெருமை வாய்ந்த சென்னை பல்கலைக்கழகமாக விளங்குவதற்கு உயர் கல்வி துறை துணை நிற்கும்” எனத்தெரிவித்தார்.

## குட்டத்துப்பட்டி ஊராட்சி, புளியராஜக்காபட்டி கிராமத்தைச் சேர்ந்த 25 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்

### தமிழகத்தின் அனைவருக்கும் வீடு என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை - அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி டிச.05

குட்டத்துப்பட்டி ஊராட்சி, புளியராஜக்காபட்டி கிராமத்தைச் சேர்ந்த 25 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார் தமிழகத்தின் அனைவருக்கும் வீடு என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை என அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், குட்டத்துப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட புளியராஜக்காபட்டி கிராமத்தைச் சேர்ந்த 25 பேர் தங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டுமென அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்ஜீகை மனு கொடுத்தனர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதன்படி இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி துரைராஜ் நகரில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஒவ்வொரு பயனாளிகளையும் அழைத்து பட்டாக்களை வழங்கி கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டி குடியிருக்க வேண்டுமென வாழ்த்தினார். இலவச வீட்டு மனை பட்டாக்களை பெற்ற பயனாளிகள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கைகூப்பி, கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். அப்போது அவர்கள் கூறுகையில் வரம் கொடுக்கும் தெய்வம்கூட தாமதமாக கொடுக்கும். ஆனால் தென்பாண்டிச் சிங்கம் அமைச்சர் ஐயா அவர்கள் உடனடியாக எங்களுக்கு பட்டாக்களை வழங்கி வீடு கட்டி குடியேறுங்கள் என வாழ்த்தினார். நாங்கள் உயிருள்ளவரை என்றும் மறக்கமாட்டோம் என்றனர். நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ராமன், ரெட்டியார்சத்திரம் இன்பராஜ், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகாந்தன், பஞ்சம்பட்டி மணி, கதிரையன்குளம் பாலன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தீமுருகன், சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல்முருகன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், நகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் முஜிப், திண்டுக்கல் மேற்கு தாசில்தார் சுல்தான் சிக்கந்தர், வருவாய் ஆய்வாளர் கண்ணன், கிராம நிர்வாக அலுவலர் விக்னேஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுமதி கணேசன், செல்வி காங்கேயன், கோனூர் திருப்பதி, முன்னாள் ஊராட்சி செயலாளர் பாலபாண்டி, கிளைச்செயலாளர் ஓ.ரவிச்சந்திரன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நகராட்சி அதிகாரிகள் திட்டங்களை செயல்படுத்துவதற்கு, அரசின் மற்ற துறை சார்ந்த அதிகாரிகளிடம் அனுமதி பெறாமல் செயல்படுவது எவ்விதத்தில் நியாயம்? பொதுமக்கள் கேள்வி

திருப்பூர், டிச.5-

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி நகராட்சி நிர்வாகம் கழிவு நீர் தொட்டி கட்டுமான பணிகளுக்காக, மின் இணைப்பு வழங்குவதற்கு இடையூறாக இருப்பதாக, நெடுஞ்சாலை துறையின் அனுமதி பெறாமல் மரத்தினை வெட்டுவதற்கு முற்பட்டனர். அதனை பூண்டி பொதுமக்கள் தடுத்து அனுமதி பெறாமல் வெட்டக்கூடாது என்று கூறியதை அடுத்து, காவல்துறை அதிகாரி மற்றும் திருமுருகன்பூண்டி நகராட்சி விமி ராமசாமி அவர்கள் முன்னிலையிலும் பேசப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையின் போது, பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையினரின் அனுமதி பெறாமல் இரவு நேரங்களில் கட்டிடப் பணிகள் நடைபெறுவதாக விமி ராமசாமி அவர்களிடம் பொதுமக்கள் கேள்வி எழுப்பினர் அதற்கு விமி ராமசாமி அவர்கள் எங்களுக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வேலைகளை செய்வோம் என்று அதிகாரத் தோனியில் கூறினார் என்று பொதுமக்கள் தங்கள் அதிருப்திகளை தெரிவித்தனர்.




## “பாமக தலைவராக நான் தான் நீடிப்பேன்; அவர்களை எதிர்கொள்ள தயார்!” அன்புமணி உறுதி

விழுப்புரம்: டிச.5-

“எங்களிடம்தான் மாம்பழம் சின்னம் உள்ளது. பாமக தலைவராக தொடர்ந்து நான் நீடிப்பேன். தேர்தல் ஆணையம் வழங்கிய அங்கீகாரம் தொடரும். நீதிமன்றத்தில் அவர்கள் (ராமதாஸ்) செய்ய இருப்பதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்” என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறினார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த பிரம்மதேசம் அருகே உள்ள கீழ்சிவிரி மற்றும் நல்லாவூர் கிராமத்தில் ஐயனார், திரவுபதி அம்மன் கோயிலில் மனைவி சவுமியாவுடன் பாமக தலைவர் அன்புமணி இன்று (டிச.4) வழிபாடு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “பாமக தலைவராக இந்திய தேர்தல் ஆணையம் விதிகளின்படி, அடுத்த ஆண்டு ஆகஸ்ட் வரை என்னை நீடித்தது. இதை எதிர்த்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இரு தரப்பு வாதங்களை கேட்ட பிறகு, தேர்தல் ஆணையம் எனக்கு கொடுத்த அங்கீகாரத்தை ரத்து செய்ய முடியாது, உட்கட்சி பிரச்சினை இருந்தால் சிவில் நீதிமன்றத்தில் வாதம் செய்யலாம் என்று டெல்லி உயர் நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கி இருக்கிறது.

டெல்லி உயர் நீதிமன்றமும், தேர்தல் ஆணையத்தின் அனுமதிப்படி அடுத்த ஆண்டு ஆகஸ்ட் வரை பாமக தலைவராக நான் தொடருவேன். மாம்பழம் சின்னமும் எங்களிடம் உள்ளது.



சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷும், கடந்த 2 மாதத்துக்கு முன்பு, இதே தீர்ப்பைத்தான் வழங்கினார். உட்கட்சி பிரச்சினை இருந்தால் சிவில் நீதிமன்றத்தை நாடலாம் என அவரும் தெரிவித்திருந்தார். தேர்தல் ஆணையம் வழங்கிய அங்கீகாரத்தில், எந்தக் கருத்தையும் நீதிமன்றம் தெரிவிக்கவில்லை.

மாம்பழம் சின்னத்தை பற்றி நீதிமன்றம் எதுவும் கூறவில்லை. இதனால் குழப்பம் இல்லை. பாமக தலைவராக தொடர்ந்து நான் நீடிப்பேன். தேர்தல் ஆணையம் வழங்கிய அங்கீகாரம் தொடரும். நீதிமன்றத்தில் அவர்கள் (ராமதாஸ்) செய்ய இருப்பதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தேர்தல் முடிவுக்கு பிறகு ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பது குறித்து முடிவு செய்யப்படும். பாமகவில் குழப்பம் இல்லை. கூடுதலாக வாக்குகள் கிடைக்கும். பாமகவில் குழப்பத்தை ஏற்படுத்த நினைத்த திமுக கைக்கூலிகளின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. திமுக சொல்வதை பாமகவில் உள்ள கைக்கூலிகள் செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், இந்த ஆண்டு நடத்திய 7 தேர்வில் 10 ஆயிரம் பேருக்குதான் பணி வழங்கி உள்ளனர். அடுத்த ஆண்டு 6 தேர்வு என்றால் 6 ஆயிரம் பேருக்குதான் வேலை கிடைக்கும். திமுக ஆட்சியில் அரசு பணிகளை, ஒப்பந்த அடிப்படையில் கொடுத்து விடுகின்றனர். ஆட்சிக்கு வந்தால் 5 லட்சம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும் என்றனர். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு 2 லட்சம் அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். 7 லட்சம் பணியிடம் காலியாக இருந்தும், நிரப்பப்படவில்லை.

போக்குவரத்து, தூய்மைப் பணியை தனியார் மயமாக்கி இருக்கின்றனர். கலெக்‌ஷன், கமிஷன், கரப்ஷன் என உள்ளனர். பணம் கொடுப்பவர்களுக்கு ஒப்பந்தம் வழங்குகின்றனர். திமுக முன்னாள் எம்பி விஜயன் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியாக இல்லை.

தமிழகத்தில் மெகா கூட்டணி அமையும். பாமக இடம்பெறும் கூட்டணி வெற்றி பெறும். திமுக கூட்டணி தோல்வி அடையும். திமுக ஆட்சி மீது மக்கள் கோபத்தில் உள்ளனர்” என்றார்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூண் மீது தீபம் ஏற்றும் விவகாரம் குறித்த கேள்விக்கு, “ஆன்மிகத்தில் சர்ச்சை வரக் கூடாது, அரசியலும் செய்யக் கூடாது, குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடாது. நீதிமன்றம் சொல்வதை கேட்க வேண்டும்” என்றார் அன்புமணி.

முன்னதாக, மரக்காணம் மற்றும் நல்லாளம் கூட்டுச்சாலையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் கீழ்சிவிரியில் நியாய விலை கடையை சவுமியா திறந்து வைத்தபோது உடனிருந்தார்.

## 2030க்குள் மின்சார வாகன சந்தை மதிப்பு 20 லட்சம் கோடி ரூபாயை எட்டும்: நிதின் கட்காரி தகவல்

புதுடில்லி: டிச.5-

இந்தியாவில் 2030ம் ஆண்டுக்குள் மின்சார வாகனங்களின் சந்தை மதிப்பு 20 லட்சம் கோடி ரூபாயை தொடும் என மத்திய அமைச்சர் நிதின் கட்காரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக லோக்சபாவில் அவர் கூறியதாவது: தற்போது இந்தியாவில் 57 லட்சம் மின்சார வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2024 25 மின்சார வாகனங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. மின்சாரத்தில் இயங்கும் கார்களின் விற்பனை 20.8 சதவீதமும், டூவிலர்களின் விற்பனையும் 33 சதவீதமும், மூன்று சக்கர வாகனங்களின் விற்பனையும் 18 சதவீதமும் அதிகரித்துள்ளது.



அதேபோல், பெட்ரோல், டீசல் கார்களின் கார்களின் விற்பனையும் 4.2 சதவீதமும், டூவிலர்களின் விற்பனையும் 14 சதவீதமும் மூன்று சக்கர வாகனங்களின் எண்ணிக்கையும் 6 சதவீதமும் அதிகரித்துள்ளது. 2030 ம் ஆண்டுக்குள் இந்தியாவில் மின்சார வாகனங்களின் சந்தை 20 லட்சம் கோடி ரூபாயை தாண்டும். ஆண்டுக்கு 5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன் 400 க்கும் மேற்பட்ட மின்சார வாகனங்களின் ஸ்டார்ட் அப் சந்தையை உருவாக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000